**மே - 5**

**"ஆவியினால் சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்." - ரோம 8 : 13.**

கர்த்தரோடு நமக்கிருக்கிற சம்பந்தத்தையும் உயிர்தெழுதலின் மகிமையில் அடையப்போகும் பங்கிற்காக உள்ள நமது நம்பிக்கையையும், நீடிக்கச் செய்வதற்குரிய நிபந்தனைகளில் திட்டமாக சரீரத்தின் செய்கைகளை அழித்தலும் சேர்ந்திருக்கிறதென்று இங்கு சொல்லப்படுகிறது. அதாவது மாம்ச விருப்பங்களை அடக்குவதும், அவைகளை சாக அடிப்பதும், சிலுவையில் அவைகளை அறைவதும், கர்த்தருக்காகவும் அவருடைய காரியங்களுக்காகவுமுள்ள ஊழியத்தில் அவைகளை உபயோகிப்பதுமாகும். இந்தவிதமான சரீரத்தின் செய்கைகளை அழித்தல், இந்த விதமான மாம்சத்தின் பலவீனங்களுக்கெதிராக நடக்கிற ஒரு யுத்தமாகும். இதைத்தான் அப்போஸ்தலன் வேறு ஒரு இடத்தில், மாம்சம் ஆவிக்கு விரோதமாகப் போரிடுகிறது என்றும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகப் போரிடுகிறது என்றும் சொல்லுகிறார். ஏனென்றால், இவை இரண்டும் எதிரானவைகளென்றும், ஜீவியத்தின் கடைசிவரை எதிரிகளாகவே இருக்கும் என்றும் நமக்குச் சொல்லும் போது, இதைப் "போராட்டம்" என்று தெரிவிக்கிறார். ஆவி இஷ்டமுள்ளதாயிருந்து அது தனது மிகச் சிறந்த திறமையோடு மாம்சத்தின் பலவீனங்களுக்கு எதிராக போர் செய்திருந்தால், கர்த்தர் மீட்பரின் புண்ணியத்தின் மூலமாக வெற்றியை நிறைவானதென்று எண்ணுவார்.

**-Z '03, 172 (R 3200)**

ஆவி என்பது புது இருதயத்தையும், மனதையும் சித்தத்தையும் குறிக்கிறது. சரீரம் மனுஷீகத்தைக் குறிக்கிறது. "சரீரத்தின் செயல்கள்" சுயநலமான, உலகத்தனமான, தப்பான, பாவமுள்ள போக்குகளையும் அவைகளின் தோற்றங்களையும் குறிக்கின்றன. சரீரத்தின் செய்கைகள் விசேஷமாக இரண்டு வழிகளில் அழிக்கப்படுகின்றன. முதலாவது, அவைகளை பெயர்த்து அந்த இடத்தில் அவைகளுக்கு எதிரான நல்ல குணங்களையும் செயல்களையும் வைத்தல். இரண்டாவது அவைகளுக்கு எதிராக இல்லாத நல்ல குணங்களின் மூலமாயும், செயல்களின் மூலமாயும் அவைகளை தடுத்து அடக்குதல், இவ்விதமாக செய்கிறவன் ஜீவனை ஆதாயம் பண்ணுவான்.

**- P '32, 48.**

**ஒத்த வாக்கியங்கள்:-**

கலா 4:6; 5:16,17,22,25; 6:8; எபே 3:16; கொலோ 3:10; 1பேது 2:21; 3:4; ரோம 6:6-23; 8:11; 1கொரி 3:16; 6:19; எபே 4:22-32; கொலோ 3:5-9; உபா 30:6; எசே 18:21; 33:15,16; சக 4:6; மத் 16:25; 19:12,16,21; லூக் 18:29,30 யோவா 12:25.

**கோபுர வாசிப்பு** : **Z '15, 356(R 5805).**

**வினாக்கள்** : இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு பயன்படுத்தப்பட்டன? அவற்றின் பலன் என்ன?